தமிழியல்துறை
மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம்
திருநெல்வேலி - 12

பாடத்திட்டக்குழுக் கூட்டம்

மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகத் தமிழியல் துறையின் முதுகலைத் தமிழ்ப் பாடத்திட்டக்குழுக் கூட்டம் பாடத்திட்டக்குழத் தலைவர் முனைவர் த.க.ஜாஸ்மின் சுதா தலைமையில் 03-07-2024 அன்று காலை 11 மணிக்கு பல்கலைக்கழகத் தமிழியல்துறையில் வைத்து நடைபெற்றது.

1. தொழில்முறை பயிற்சி(Internship):

காட்சி ஊடகங்கள், சமூக ஊடகங்கள், நுண்கலைப்பயிற்சி, வகுப்பு எடுத்தல் இவற்றுள் ஏதேனும் ஒன்றில் பயிற்சி மேற்கொண்டு சான்றிதழும், அறிக்கையும் சமர்ப்பிக்கப்பட வேண்டும். கால அவகாசம் 10 நாட்கள், கல்லூரி வேலை நாட்கள் அல்லாமல் இதர விடுமுறை நாட்களிலும் மாணவர்கள் இப்பயிற்சியை மேற்கொள்ளலாம்.

மதிப்பெண்கள் - உள்மதிப்பீடு அறிக்கை,

சான்றிதழுக்கு - 75 மதிப்பெண்கள் - பாட ஆசிரியர்

அறிக்கை 10 பக்கங்களுக்கு மிகாமல் இருக்க வேண்டும்.

2. களப்பணி:

ஊர் பெயர், மக்கள் பெயர், வழிபாட்டு முறைகள், சடங்குகள், நம்பிக்கைகள், வழக்காறுகள், புழங்கு பொருட்கள், கல்வெட்டுகள், வட்டார ஆளுமைகள், தொன்மங்கள் (தெய்வத் தோற்றக் கதைகள்), வாய்மொழி வழக்காறுகள்(பாடல், கதை, பழமொழி, கதைப்பாடல், விடுகதை) நாட்டுப்புறக் கலைஞர்கள், வாழ்வியல்(நேர்காணல்), நாட்டுப்புறக் கலைகள் இவற்றுள் ஏதேனும் ஒன்றை தேர்வு செய்து 25 பக்கத்திற்கு குறையாமல் அறிக்கை சமர்பிக்க வேண்டும். பாட வரையறைச் சட்டத்தில் களப்பணிக்கு மதிப்பெண் வழங்கப்படவில்லை. ஆனால் இக் களப்பிணிக்கு 100 மதிப்பெண்கள் வழங்கப்பட வேண்டும். பாட ஆசிரியரே மாணவர்களின் இக்களப்பணிக்கு மதிப்பெண் வழங்க வேண்டும்.

தொழிற்முறை பயிற்சியில் (INTERNSHIP) தொலைதூர கல்வி பயிலும் மாணவர்களுக்கு அகமதிப்பீடு இல்லாமல் மாணவர்கள் சமர்ப்பிக்கும் அறிக்கையின் அடிப்படையில் 100 மதிப்பெண்கள் வழங்கப்பட வேண்டும்.
முதுகலை மூன்றாம் பருவத்திற்குரிய ஆராய்ச்சி நெறிமுறைகள் என்னும். நூலுக்கான பாடநூல்கள் குறிப்பிடப்படவில்லை. எனவே அதற்கான பாடநூல்களாக கீழ்குறிப்பிடும் இரு நூல்களை சேர்க்க பரிந்துரைக்கப்படுகிறது.